தினமணி

## புதிய வரி உயர்வு மூலம் ரூ. 45,940 கோடி!

First Published : 17 Mar 2012 01:40:17 AM IST

Last Updated : 17 Mar 2012 02:17:07 AM IST



புது தில்லி, மார்ச் 16: மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் விதிக்கப்பட்ட கூடுதல் வரி மூலம் அரசுக்கு ரூ. 45,940 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்களவையில் வெள்ளிக்கிழமை 2012-13-ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை பிரணாப் முகர்ஜி தாக்கல் செய்தார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மாதாந்திர சம்பளதாரர்களின் வருமான வரி விலக்கு வரம்பு ரூ. 1.80 லட்சத்திலிருந்து ரூ. 2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது சம்பளதாரர்கள் மத்தியில் மிகுந்த ஏமாற்றமளிப்பதாக அமைந்தது.

அரசின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் சேவை வரி மற்றும் உற்பத்தி வரியை 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தியுள்ளார் பிரணாப். இதன் மூலம் கூடுதலாக அரசுக்கு ரூ. 45,940 கோடி வரி வருவாய் கிடைக்கும்.

கூடுதல் வரி விதிப்பில் சுங்க வரி மற்றும் உற்பத்தி வரிகள் மூலம் ரூ. 27,280 கோடியும், சேவை வரி மூலம் ரூ. 18,660 கோடியும் கூடுதலாகக் கிடைக்கும். நிறுவனங்கள் மீதான கம்பெனி வரி விதிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. சுங்க வரி விதிப்பிலும் மாற்றமில்லை. அதேசமயம் கட்டுமானம், மின்சாரம், விமானம், சாலை, பாலம், மருத்துவமனை, உணவு பதப்படுத்தும் கிடங்குகள், குறைந்த விலை வீடுகள் ஆகியவற்றுக்கு வரிச் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

மொபைல் போன், நிறுவன முத்திரை கொண்ட வெள்ளி நகைகள், நிறுவன ஆடைகள், இறக்குமதி செய்யப்பட்ட எல்சிடி-க்கள், 20 அங்குலத்துக்கு மேற்பட்ட எல்இடி டி.வி.க்கள் ஆகியவற்றின் விலை குறையும். இவற்றின் மீதான வரி குறைக்கப்பட்டுள்ளது. மோட்டார்

சைக்கிள்கள், கார், ரெஃப்ரிஜிரேட்டர்கள், ஏ.சி-க்கள், வாஷிங் மெஷின், கைக்கடிகாரங்கள், சோப்பு, சிகரெட், பீடி, பான் மசாலா, தங்கம், இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள் ஆகியவற்றின் விலை உயரும். விமானப் பயணத்துக்கும் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

வங்கிகளில் சேமிப்பு மூலம் கிடைக்கும் வட்டித் தொகை ஆண்டுக்கு ரூ. 10 ஆயிரம் வரை இருந்தால் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் காப்பீடுகளுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு வரும் வரிச் சலுகையுடன் இப்போது ரூ. 5 ஆயிரம் வரையிலான மருத்துவப் பரிசோதனைகளுக்கும் விலக்கு தரப்படுகிறது.

வியாபாரத்தின் மூலமான வருவாய் அல்லாமல் பிற வருமானமாக இருந்தால் மூத்த குடிமக்கள் இனி வருமான வரிப் படிவத்தை தாக்கல் செய்ய வேண்டாம். பங்குச் சந்தையை ஊக்குவிக்கும் நோக்கில் பங்கு பரிவர்த்தனைக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. முதல்முறையாக பங்குச் சந்தையில் முதலீடு செய்வோருக்கு ரூ. 50 ஆயிரம் வரையிலான தொகைக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

விமான இறக்குமதி மற்றும் பரிசோதனைக் கருவிகள் மீதான இறக்குமதி வரி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது. வெளி நாடுகளிலிருந்து 100 கோடி டாலர் வரை கடன் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள சொத்து மற்றும் வருவாய் மதிப்பு குறித்த அறிக்கை அளிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ரூ. 2 லட்சத்துக்கும் மேலான தொகைக்கு தங்க நகை வாங்குவோர் அப்போதே வரி செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அசையா சொத்து பரிமாற்றம், நிலக்கரி, இரும்புத் தாது வர்த்தகத்துக்கும் முன்கூட்டியே வரி வசூலிக்கும் முறை கடந்த சில பட்ஜெட்டுகளாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. அது இனியும் தொடரும். புதிய வரி விதிப்புக்குப் பிறகு மொத்த வரி வருவாய் ரூ. 10,77,612 கோடி. இது முந்தைய பட்ஜெட்டைக் காட்டிலும் 15.6 சதவீதம் அதிகம். 2011-12-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டை விட 19.5 சதவீதம் அதிகம்.

2012-13-ம் நிதி ஆண்டின் மொத்தச் செலவு ரூ. 14,90,925 கோடி. இதில் திட்டச் செலவு ரூ. 5,21,025 கோடி. திட்டம் சாரா செலவு ரூ. 9,69,900 கோடி. குறைவாக வரி விதிக்கப்பட்டபோதிலும், அரசு நிறுவனப் பங்கு விற்பனை மூலம் வருவாயை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும் வரும் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை 5.9 சதவீதமாக இருக்கும்.

இருப்பினும் ஒருங்கிணைந்த நிதி சீரமைப்பு நடவடிக்கைகள் மூலம் 2012-13-ம் நிதி ஆண்டில் நிதிப் பற்றாக்குறை ரூ. 5,13,590 கோடியாக இருக்கும் என்றும் இது 5.1 சதவீதத்துக்குள் கட்டுப்படுத்தப்படும். நிதி நெருக்கடியைச் சமாளிக்க பொதுச் சந்தையிலிருந்து ரூ. 4,79,000 கோடி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2012-13-ம் நிதி ஆண்டில் அரசின் மொத்தக் கடன் மதிப்பு நாட்டின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45.5 சதவீதமாக இருக்கும். ஆனால் 13-வது நிதிக் கமிஷன் மொத்த கடன் சுமை 50.5 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிட்டுள்ளது.

வருவாய் பற்றாக்குறை வரும் நிதி ஆண்டில் ரூ. 1,85,752 கோடியாக இருக்கும். இது நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.8 சதவீதமாகும். வரும் நிதி ஆண்டில் ராணுவத்துக்கான ஒதுக்கீடு ரூ. 1,93,407 கோடி. இது முந்தைய ஆண்டு ஒதுக்கப்பட்டதை விட 17 சதவீதம் அதிகம். முந்தைய நிதி ஆண்டில் ராணுவத்துக்கு ரூ. 1,64,415 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மூலதனச் செலவுக்கு ரூ. 79,579 கோடி ஒதுக்கப்ட்டுள்ளது. பங்குச் சந்தையில் நிலவும் ஸ்திரமற்ற நிலையைக் கருத்தில் கொண்டு அரசு நிறுவனப் பங்கு விற்பனை மூலம் ரூ. 30 ஆயிரம் கோடி திரட்ட முடிவு செய்யப்பட்டது. முந்தைய ஆண்டு ரூ. 40 ஆயிரம் கோடி திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடைசியில் ரூ. 14 ஆயிரம் கோடி மட்டுமே திரட்ட முடிந்தது. தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பது, விவசாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக விளங்குபவற்றை நீக்குவது, மின் சக்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை உள்ளிட்டவை இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன.

எண்ணெய், உரம் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் மானியத்தை படிப்படியாகக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு அளிக்கும் மானியத்தை 2 சதவீதமாகவும் அடுத்த மூன்று ஆண்டுகளில் 1.75 சதவீதமாகவும் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

12-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அடிப்படைக் கட்டமைப்புக்கு ரூ. 50 லட்சம் கோடி தேவை என மதிப்பிடப்பட்டு அதில் பெருமளவு தனியார்துறை மூலம் திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் ரூ. 60 ஆயிரம் கோடிக்கு கட்டமைப்புக்கான கடன் பத்திரங்களை வெளியிடப் போவதாக பிரணாப் அறிவித்தார்.

விவசாயத்தை ஊக்குவிக்க வேளாண் கடன் தொகை ரூ. 5.75 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, 3 சதவீத சலுகைக் கடனும் விவசாயத்துக்கு அளிக்கப்படுவதாக பிரணாப் கூறினார்.

## அரசியல் நிலையை புரிந்து கொள்ள வேண்டும்: பட்ஜெட் விமர்சனத்துக்கு பிரணாப் பதில்

First Published : 19 Mar 2012 04:53:29 AM IST



புது தில்லி, மார்ச் 18: மத்திய பட்ஜெட் பொருளாதாரச் சீர்திருத்தத்தை ஊக்கப்படுத்துவதாகவும் உறுதியானதாகவும் இல்லை என்று குறைகூறும் விமர்சகர்கள் அரசியல் எதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கேட்டுக் கொண்டார்.

பட்ஜெட் தொடர்பாக பிடிஐ நிறுவனத்துக்கு அவர் ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டி: பட்ஜெட் தொடர்பாக விமர்சகர்களின் கருத்து ஏமாற்றமாக இருக்கிறது. அவர்கள் அரசியல் எதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பொதுத் தேர்தலுக்கு ஒரு ஆண்டுதான் இருக்கும் என்பதால், 2013-ம் ஆண்டில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலான பட்ஜெட்டை சமர்ப்பிப்பது கடினம். அதனால், இந்த பட்ஜெட்டிலேயே அனைத்துவிதமான "திருத்த' நடவடிக்கைகளையும் அறிவித்திருக்க வேண்டும் என்று அனைவரும் எதிர்பார்ப்பது இயற்கைதான்.

ஆனால், இதைச் செய்ய வேண்டும். இதைச் செய்யக்கூடாது என்று தெளிவாகக் கூறிவிடுவதற்கு, பட்ஜெட் என்பது வெறும் பொருளாதாரக் கொள்கை மாத்திரமல்ல. இது அரசியல் ஆவணமும்கூட. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பெரும்பான்மை ஆதரவுடன் அதற்கு ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது.

பட்ஜெட்டுக்கு கூட்டணிக் கட்சிகள் ஒப்புதல் தரவில்லை என்றால், அதை அமல்படுத்துவது கடினமாகிவிடும்.

பட்ஜெட் தொடர்பான அனைத்து அம்சங்களும் பிரதமரும் நிதியமைச்சரும் மட்டுமே தீர்மானிக்க வேண்டியவை. அதனால் கூட்டணிக் கட்சிகளுடன் இதுபற்றி முன்கூட்டியே விவாதித்து அனுமதி பெற முடியாது. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான் விரிவான ஆலோசனை சாத்தியம்.

மறைமுக வரிவிதிப்பு தொடர்பான பட்ஜெட் அறிவிப்புகள் பணவீக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் உற்பத்தியாளர்கள் தங்களது சுமையை சாமானிய மக்கள் மீது இறக்கி வைப்பதைத் தடுப்பதற்கான உத்தி ஏதும் என்னிடம் இல்லை. பணவீக்கத்துக்கு வரி விதிப்பு மட்டுமே காரணம் கிடையாது.

உற்பத்தி வரியை 10 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக உயர்த்திருப்பது சாதாரணமானதுதான். 2008-ம் ஆண்டில் இதை 14 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாகக் குறைத்தது நான்தான். இப்போது பழைய அளவுக்குக்கூட உயர்த்தவில்லை.

மானியம் என்பது அரசின் கொடுக்கும் திறனைப் பொறுத்தது. அதனால்தான் மானியங்களுக்கான ஒதுக்கீட்டை 2 சதவீதத்தில் இருந்து 1.75 சதவீதமாகக் குறைக்க நேர்ந்தது. இன்று வரைக்கும் கொடுக்க முடிகிறது. அதனால் அரசு தருகிறது. நாளை முடியவில்லை என்றால், தரப் போவதில்லை. அதனால் இதற்கு ஒரு வரம்பு நிர்ணயிக்க முடியாது.

முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு முன் விரிவான ஆலோசனை நடக்கவில்லை என்று கூறுவதை ஏற்க முடியாது. பலருடைய ஆலோசனைகளையும் கேட்ட பிறகே முடிவுக்கு வருகிறோம். எனினும்

பட்ஜெட் தயாரிக்கும்போது இது சாத்தியமல்ல. பட்ஜெட் சமர்ப்பித்த பிறகு இதைச் செய்ய முடியும் என்றார் பிரணாப்.

## விலைவீழ்ச்சியால் மஞ்சள் விவசாயிகளுக்கு நஷ்டம்

First Published : 17 Mar 2012 10:35:49 AM IST

திருப்பூர், மார்ச் 16: விலை வீழ்ச்சியால் மஞ்சள் விவசாயிகள் நஷ்டமடைவதைத் தவிர்க்க, மஞ்சளை குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரம் விலை கொடுத்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும், என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

÷திருப்பூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடந்த குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

÷மஞ்சள் சாகுபடி செய்ய வெட்டுக்கூலி, முட்டு வழிச்செலவு என ஒரு ஏக்கருக்கு ரூ.75 ஆயிரம் செலவாகிறது. ஆனால், குவிண்டாலுக்கு ரூ.2500 முதல் ரூ.3500 வரை மட்டுமே விலை கிடைப்பதால், ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படுகிறது.

கொப்பரை தேங்காய் விலை வீழ்ச்சியை தடுக்க அரசே விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்கிறது. அதே போல், மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரம் விலை நிர்ணயம் செய்து கொள்முதல் நிலையங்கள் மூலம் அரசே மஞ்சளை கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.

÷தற்போது பயிரிடப்பட்டுள்ள கரும்புகளை "பஞ்சு அவுனி' எனும் நோய் தாக்கி வருவதால், கரும்பு விளைச்சல் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. அந் நோய் கிருமிகளை தடுக்க வேளாண்மைத் துறை விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். உழவர் சந்தையில் கட்டாய சுங்கவரி வசூலிப்பதைத் தடுக்க வேண்டும்.

÷தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டத்தில் மொத்தமாக ஒரு பகுதி முழுவதும் விவசாய பயிர் பாதிக்கப்பட்டால் மட்டுமே இழப்பீடு வழங்கப்படுகிறது. அதைத் தவிர்த்து, பாதிக்கப்பட்ட தனிநபர் அடிப்படையில் இழப்பீடு அளிக்க வேண்டும். வரலாறு காணாத அளவில் வெளிச்சந்தையில் கொப்பரை கொள்முதல் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கு பாமாயில் இறக்குமதி செய்யப்படுவதே முக்கியக் காரணம். ஆகவே, பாமாயில் இறக்குமதி செய்வதற்கு அரசு தடை விதிப்பதுடன், வெளிச்சந்தையில் கடந்தாண்டைபோல் கொப்பரை கொள்முதல் விலை கிலோ ரூ.70 கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

÷திருப்பூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு 3 ஆண்டுகளாகியும், மடத்துக்குளம் தாலுகாவுக்கு உட்பட்ட 13 வருவாய் கிராமங்கள் கோவை மாவட்ட காவல்துறைக்கு உட்பட்ட நெகமம் காவல்நிலைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இதனால், வழக்குகள் தொடர்பாக அக் கிராம மக்கள் இன்னும் கோவை மாவட்ட காவல்துறையை அணுக வேண்டியுள்ளது. அக் கிராமங்களை திருப்பூர் மாவட்ட

காவல்துறைக்குட்பட்ட காவல்நிலைய கட்டுப்பாட்டில் இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.
÷"சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் இக் கோரிக்கைகள் மீது தகுந்த தீர்வு காணப்படும்' என்றார் ஆட்சியர் மதிவாணன்.

## மழையால் 50 ஆயிரம் ஏக்கரில் நெல் அறுவடை பாதிப்பு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் கவலை

ரெ. ஜாய்சன்
First Published : 16 Mar 2012 02:47:27 PM IST

திருநெல்வேலி, மார்ச் 15: திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் நெல் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், நெல்லுக்குப் போதிய விலை இல்லாததால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.
திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 3 தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வங்கக்கடலில் தமிழக கடற்கரைக்கும், இலங்கைக்கும் இடையே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, இந்தக் காலம்தவறிய மழை பெய்வதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
மழை காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக இருந்துவந்த சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கம் குறைந்து, குளிர்ச்சியான வானிலை நிலவி வருகிறது. வெப்பம் தணிந்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதேநேரத்தில் நெல் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதால், இந்த மழை விவசாயிகளை வேதனையடையச் செய்துள்ளது.
திருநெல்வேலி மாவட்டத்தில் பிசான நெல் அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ளன. மாவட்டத்தில் 25 சதவீதம் மட்டுமே அறுவடை முடிவடைந்துள்ளது. அனைத்துப் பயிர்களும் அறுவடைக்குத் தயாராக இருப்பதால் அறுவடைப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.
இந்நிலையில், கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் நெல் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. நெற்பயிர்கள் தரையோடு தரையாகச் சாய்ந்து கிடக்கின்றன. மேலும், வயல்களில் தண்ணீர் தேங்கி, சகதியாக மாறியுள்ளது.
தற்போது பெரும்பாலும் நெல் அறுவடைப் பணி இயந்திரத்தின் மூலமே நடைபெறுகிறது. நெற்பயிர்கள் தரையோடு தரையாகச் சாய்ந்து கிடப்பதாலும், வயல்கள் சகதியாக இருப்பதாலும் இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இயந்திரத்தின் மூலம் ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கரில் அறுவடை செய்ய முடியும். ஆனால், தற்போது வயல்களில் தண்ணீர் தேங்கி இருப்பதால் ஒரு ஏக்கர் அறுவடை செய்ய 2 மணி நேரம் ஆகிறது. இதனால், இயந்திரத்துக்கு இருமடங்கு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது என்றார் திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர். கசமுத்து.

திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக, அம்பாசமுத்திரம் பகுதியில் கடந்த சில நாள்களாக ஓரளவு நல்ல மழை பெய்துள்ளது. இதனால், அம்பாசமுத்திரம் வட்டத்தில் மட்டும் 10 ஆயிரம் ஏக்கர் அறுவடை செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுவதும் தாமிரபரணி பாசனத்தில் மட்டும் 35 ஆயிரம் ஏக்கரிலும், கடனாநதி, ராமநதி பாசனத்தில் 10 ஆயிரம் ஏக்கரிலும், நான்குனேரி வட்டத்தில் களக்காடு பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரிலும் நெல் அறுவடைப் பணி பாதிக்கப்பட்டுள்ளது என்றார் அவர். இதுபோல தூத்துக்குடி மாவட்டத்தில் குரும்பூர், மூலக்கரை, சோனகன்விளை போன்ற இடங்களில் சுமார் 500 ஏக்கரில் நெல் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரை பிந்தி பயிரிடப்பட்டவை என்பதால் பெரிய அளவில் பாதிப்பில்லை என்றனர் அவர்கள்.

போதுமான விலை இல்லை: நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.1150 என அரசு நிர்ணயித்துள்ளது. ஆனால், ஒரு கோட்டை நெல், அதாவது ஒன்றரை குவிண்டால் நெல் ரூ.1000 முதல் ரூ.1200 வரைதான் விலை போகிறது என்றார் கசமுத்து.

அவர் மேலும் கூறுகையில், தற்போது பெய்துள்ள மழை காரணமாக நெல்லின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது.

உலரவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 20 சதவீத ஈரப்பதம் இருக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஆனால், தற்போது 40 சதவீதம்வரை ஈரப்பதம் உள்ளதால், அறுவடை செய்த நெல்லைக்கூட விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தினமும் ரூ.3 லட்சம் அளவுக்கு மட்டுமே நெல் கொள்முதல் செய்ய பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது போதுமானதாக இல்லை. ரூ.10 லட்சம் வரை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் வாங்க தயாராக இருக்க வேண்டும். மேலும், அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை.

அம்பாசமுத்திரம் வட்டத்தில் 2 கொள்முதல் நிலையங்கள் மட்டுமே உள்ளன. எனவே, நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களை அரசு அமைக்க வேண்டும் என்றார் அவர்.

---

தினகரன்

## கோடை மழை இல்லாததால் முந்திரி விளைச்சல் டல்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-17 10:13:05

காரைக்குடி: கோடை மழை இல்லாத தால் முந்திரி விளைச்சல் பாதிக்கும் அபாயம் உள்ளது. சிவகங்கை மாவட்டத் தில் சிவகங்கை, காரைக்குடி, கல்லல், எஸ்.வி.மங்கலம், குன்றக்குடி உட்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 8000 ஏக்கரில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தட்பவெப்ப நிலை மாற்றத்தால் மார்ச் முதல் வாரத்தில் துவங்க வேண்டிய விளைச்சல், தற்போது தான் துவங்கியுள் ளது. வரும் ஜூன் மாதம் வரை சீசன் இருக்கும்.

தற்போது பூக்கள் பூத்துக் குலுங்கும் நிலையில் இதுவரை கோடை மழை பெய்யாததால், பூக்கள் கருகி விடும் அபாயம் உள் ளது. இதே நிலை நீடித்தால் முந்திரி விளைச்சல் வெகுவாக பாதிக்கும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து விவசாயி ராமசாமி கூறுகை யில், காரைக்குடி தாலுகா வில் கண்டனூர், புதுவயல், வேலங்குடி, மணச்சை, அமராவதி புதூர், செஞ்சை ஆகிய பகுதியில் முந்திரி தோட்டம் உள்ளது. கடந்த 15 நாட்களுக்கு முன்பு துவங்க வேண்டிய சீசன் தற்போதுதான் துவங்கி உள்ளது. இதுவரை கோடை மழை பெய்யவில்லை. இதேநிலை நீடித்தால் விளைச்சல் கடுமையாக பாதிக்கும் என்றார்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர் மழையால் அறுவடை பாதிப்பு விவசாயிகள் கவலை

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-17 12:57:01

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கோடை மழையால் நெல் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 3 தினங்களாக பெய்துவரும் கோடை மழையால் நெல் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதுன.

மாவட்டத்தில் ஏரல், அகரம், ஆத்தூர், வல்லநாடு, மணக்கரை, கருங்குளம், செய்துங்கநல்லூர், வசவப்பபுரம், முறப்பநாடு, முத் தாலங்குறிச்சி, ஸ்ரீவைகுண் டம் உள்ளிட்ட பகுதிகளில் பல

ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வயல்களில் அதிகளவு தண்ணீர் தேங்கியுள்ளதால் நெற்கதிர்கள் தண்ணீரில் மூழ்கி கிடக்கின்றன. இதனால் இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யமுடியாத நிலை ஏற்பட் டுள்ளதுடன் நெல்மணிகள் அழுகி சேதமாகியுள்ளன.

மாவட்டத்தில் நேற்றும் மழை பெய்தது. தாழ் வான பகுதிகளில் தண் ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதில் குலசேகரன்பட்டினத்தில் அதிகபட்சமாக 83 மி.மீட்டர் மழையளவு பதிவாகி உள்ளது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழையளவு விபரம் (மில்லி மீட்டரில்) வருமாறு: திருச்செந்தூர்- 64.9 மிமீ, குலசேகரன்பட்டினத்தில்-83, காயல்பட்டினத்தில் 51.18, சாத்தான்குளத்தில் 70.2, எட்டையபுரம் 2, தூத்துக்குடி 18 மிமீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

உப்பள தொழிலும் முடக்கம்

மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி தொழில் நடக்கிறது. தொடர் மழையால் உப்பு உற்பத்தி அடியோடு முடங்கியுள்ளது. உப்பளங்களில் வாருவதற்கு தயாராக இருந்த உப்பு மழையில் கரைந்து விட்டது. உப்பளங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளதால் உப்பு தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

நோய் பரவும் அபாயம்

மழையின் காரணமாக தூத்துக்குடி மாநகர பகுதிகளில் தேங்கி கிடக்கும் கழிவுநீர் மற்றும் மழைநீரால் கொசுக்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. இது காலரா, டெங்கு, டைபாய்டு, மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. இதை தடுத்திட நோய் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.